# மே – 15 – செவ்வாய்

## புனித இசிதோர்

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 20 : 17 - 27

அக்காலத்தில் பவுல் மிலேத்துவிலிருந்து எபேசுக்கு ஆளனுப்பி, திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்தார்.அவர்கள் வந்ததும் அவர்களிடம் அவர் கூறியது "நான் ஆசியாவுக்கு வந்து சேர்ந்த நாள்முதல் இந்நாள்வரை எவ்வாறு உங்களிடம் நடந்து கொண்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.யூதர்களுடைய சூழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்ட சோதனைகளின்போது மிகுந்த மனத்தாழ்மையோடும், கண்ணீரோடும் ஆண்டவருக்குப் பணிபுரிந்தேன்.நன்மை பயக்குமொன்றையும் உங்களுக்கு நான் அறிவிக்காமல் விட்டுவிடவில்லை பொது இடங்களிலும் வீடுவீடாகவும் சென்று உங்களுக்குக் கற்றுக்கொடுத்தேன்.நம் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளுமாறும், மனம்மாறி கடவுளிடம் வந்து சேருமாறும் நான் யூதரிடமும் கிரேக்கரிடமும் வற்புறுத்திக் கூறினேன்.இப்போதும் தூய ஆவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்லுகிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடுமென்பது தெரியாது. சிறைவாழ்வும், இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார். என்னைப்பொறுத்த வரையில் எனது உயிரை ஒருபொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப்பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என்விருப்பம்.இதுவரை நான் உங்களிடையே வந்து இறையாட்சியைப் பற்றி பறைசாற்றினேன். ஆனால் இனிமேல் உங்களுள் எவரும் என்முகத்தைப் பார்க்கப் போவதில்லை என்று நானறிவேன்.உங்களுள் எவரது அழிவுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்று இன்று நான் உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.கடவுளின் திட்டம் எதையும் நான் உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிடவில்லை.

**பதில்பாடல்:** உலகிலுள்ள அரசர்களே கடவுளைப் புகழ்த்தேத்துங்கள்.

### நற்செய்தி : யோவான்17 : 1 – 11

அக்காலத்தில் இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கூறியதாவது: "தந்தையே, நேரம் வந்துவிட்டது. உம்மகன் உம்மை மாட்சிப்படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஒப்படைத்தீர். அவர்களும் உம்வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள். நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள். "என்னுடைய தெல்லாம் உம்முடையதே. உம்முடையதும் என்னுடையதே. அவர்கள் வழியாய் நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம்பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்" என்றார்.

**தியானம்:** வீழ்ந்து எழுந்த மனிதன் பக்குவப்பட முடியாது. மழைத்துளி வீழ்கிறது மண் வழமடைகிறது. அருவி வீழ்வதனால் ஆறு ஓடுகிறது. பழுத்த இலை வீழ்ந்தால்தான் இளந்தளிர் உருவாகும். பலரின் வாழ்க்கையும் இதைப்போன்றது. இறைவனுடைய பிரசன்னதால் புதுப்பிறப்பாகி பல்வேறு துன்பங்கள் அனுபவித்தவர், உலகின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று நற்செய்தியை அறிவத்தது மட்டுமல்லாமல் தனது உயிரைக்கூட ஒரு பொருட்டாக மதிக்காமல் ஊழியம் செய்வதை இன்றைய முதல் வாசகத்தினூடாக காண்கின்றோம். உண்மையான ஒரே கடவுளையும் அவர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வாகும். எப்படியும் வாழலாம் என்பது கிறிஸ்த்தவ வாழ்க்கையல்ல இப்படித்தான் வாழவேண்டும் என்பதைக் கூறி நிற்கின்றது இறைவார்த்தைகள். "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களைத் தெரிந்து கொண்டேன" என்று கூறிய ஆண்டவர் தம் ஒரே மகன் மூலமாக எம்மை மீட்டார். இயேசு தம்மோடு வழிவந்த சீடர்களுக்காக மனமுருகி இறைவேண்டல் செய்வதை இன்றைய நற்செய்தி வாசகமூடாக காண்கின்றோம். இறையாட்சியை நோக்கிய பயணமானது உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாக கொண்டதல்ல மாறாக கல்லும் முள்ளும், கரடும் முரடும் கொண்ட பயணமாகும். எவ்வளவாய் உலகத்தில் அன்பு கூறுகின்றீர் என்பதற்கு இவ்வளவாய் என்று தன் கரங்களை சிலுவையில் விரித்து எமக்காக தனது உயிரை ஒப்புக்கொடுத்த அன்பிற்கீடாக நாமும் எமது வாழ்வுப்பாதையை அன்பு, பகிர்வு, மன்னிப்பு. தாழ்ச்சி பணிவு ஆகிய பண்புகளைக் கொண்ட வாழ்வாக அமைத்துக்கொள்ள இறைவனிடம் வரம் வேண்டுவோம்.